**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 334/2022**

**Witness PW 2**

பெயர் ராஜவேலு த/பெ வல்லாளன்

இன்று (22.04.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயம். சொத்து எதாவது உள்ளதா என்றால் உள்ளது. எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 2 ஏக்கர் உள்ளது. பாவாடை கவுண்டர் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு என்ன வயது என்றால் 52 வயதாகிறது. பிரமாணபத்திரிக்கையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண பத்திரிக்கையில் பாகம் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் அந்த பாகம் யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்றால் பாகம் பிரித்த விவரம் எனக்கு தெரியாது ஆனால் சுப்ரமணி பெயரில் இருந்ததை புனிதாவுக்கு எழுதி கொடுத்தார். என்ன ஆவணமாக எழுதிக் கொடுத்தார் என்றால் செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதிக்கொடுத்தார். செட்டில்மெண்ட் எழுதியது எனக்கு நேரடியாக தெரியுமாஎன்றால் சொல்லிதான் தெரியும். எந்த தேதி வருடம் மாதம் செட்டில்மெண்ட் ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் 2008 ல் ஏற்பட்டது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் வாங்கி படித்தேனா என்றால் நான் வாங்கி படிக்கவில்லை. அந்த பத்திரத்தில் என்ன வாசகம் கண்டுள்ளது என்றோ எந்த சொத்து சம்மந்தமாக எழுதிகொடுத்தது என்றோ எனக்கு தெரியாது என்றால் சரியல்ல

வீட்டு மண் சம்மந்தமாக எழுதப்பட்டது . அந்த வீட்டு மண் அவரது அப்பா சுப்ரமணி என்பவருக்கு பரம்பரை சொத்து . அந்த சொத்தின் நீள அகலம் விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது . அந்த சொத்தின் நான்கு எல்லை தெரியுமா என்றால் மேற்கே பூங்காவனம், வடக்கே மாரியம்மன் கோவில் தென்புறம் ரோடு , கிழக்கு குப்புசாமி. அந்த சொத்தில் வீடு உள்ளதா என்றால் கீலகமான வீடு இருந்தது அதனை விற்ற பிறகு இடித்துவிட்டார்கள். வாதிக்கு சொத்து எப்படி வந்தது என்றால் வாதி புனிதாவிடம் கிரையம் வாங்கினார். தற்போது நிலம் காலியாக தான் உள்ளது என்றால் வாதி தான் சொத்தை இடித்து நிறுவி கை கால் கழுவும் இடமாக வைத்திருக்கிறார் . பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் புனிதா பெயரில் உள்ளது. வாதி எனக்கு என்ன உறவு என்றால் உறவு இல்லை பக்கத்து தெரு. அந்த நிலத்தில் ஏற்கனவே இருந்த வீடு யாருக்கு சொந்தமானது என்றால் சுப்ரமணிக்கு சொந்தமானது . அதில் மின் இணைப்பு உள்ளதா என்றால் ஏற்கனவே இருந்தது இப்போது வீடு நிரவிவிட்டார்கள் . நான் வாதி மகேஷ் மற்றும் புனிதா என்பவர்களுக்கு வேண்டியவர் என்பதால் வாதிக்குஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியமானது , புனிதாவோ, அவரது தந்தையார் சுப்ரமணியோ அனுபவத்தில் இருந்தது இல்லை , அவர்களுக்கு உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-A. Tamilselvan)
I Additional Subordinate Judge,
Villupuram